1981 மார்ச் 26]

[முற்பகல் 9-50]

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, சாதாரணமாக ஒரு பெரிய பாலத்தையே 2, 3 ஆண்டுகளில் கட்டி முடித்து விடுகிறார்கள். ஆனால் ஒரு சிறிய பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு 7, 8 ஆண்டுக் காலமாவதற்குக் காரணம் என்ன? கம்பம் பஞ்சாயத்து யூனியனில் நிதி கூடுதலாக இருக்கிறது. அப்படி இருந்தும் இதுவரை வேலை முடிவடையாததற்கு யார் காரணம்? அந்த அதிகாரி மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் அது பேரூராட்சிக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் அந்த இடத்திற்குப் பேருந்துகள் செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அது நன்கொடையாகப் பெறப்பட்டது என்றாலும் அதற்கு இரண்டாண்டுகள் ஆகிவிட்டது. அதனால்தான் இந்தக் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

தண்டாரம்பட்டில் அரசு மருத்துவமனை.

*வினா எண் 498—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டில் அரசினர் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 10,000 கட்டப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : ஆம்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தற்போது அமைச்சரவர்கள் '' ஆம் '' என்று பதில் அளித்தார்கள். அந்தத் தொகை எப்போது கட்டப்பட்டது, யாரால் கட்டப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமி டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரர்களே, தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள் 10,000 ரூபாய் கொடுத்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. அதன் பிறகு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸ் பாமிலி வெல்பேர் அவர்கள் ப்ரொப்போசல் அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. த. வேணுகோபால்: தலைவரவர்களே, தண்டராம் பட்டு, தொகுதியின் மைய இடமாக இருப்பதால், அங்கு மருத்துவ வசதிக்கு என்று ஒரு மருத்துவமனை இல்லாத காரணத்தால், அங்கே மருத்துவ மனை கட்டுவதற்காக 10,000 ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அரசாங்க மருத்துவமனை ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: : தலைவரவர்களே, மருத்துவமனை அமைப்பதுபற்றி இயக்குநர் இரண்டு பரிந்துரை களை அனுப்பியிருக்கிறார். முதலாவதாக, தண்டராம் பட்டில் ஒரு மருத்துவமனை தொடங்கலாம் என்பது. அது மட்டுமல்லாமல், ஏற்கனவே தண்டராம்பட்டில் அதாவது தண்டராம்பட்டுக்கு அருகில் 3 மைல் தூரத்தில் மொத்தக் கல் என்ற இடத்தில் ஒரு ரூரல் டிஸ்பென்சரி இருக்கிறது; அதையும் இந்த மருத்துவ மனையையும், இரண்டையும் ஒன்றாக ஓரே இடத்தில் ஆரம்பித்து செயல்பட்டால் நன்றாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தச் சிக்கல் ஏற்பட்டது. ஓரே இடத்தில் இரண்டும் செயல்படும் அடிப்படையில் பார்த்தால் இன்னும் தொகை தேவைப்படு கிறது. அதுவும் பெறப்பட்டு, இரண்டு மருத்துவ மனை களையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

இடைப்பாடி தொகுதியில் மினி ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 499—திரு. இ. கணேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி இடைப்பாடி பஞ்சாயத்து ஒன்றியத்திலுள்ள ஆடையூர் மற்றும் பக்கநாடு பகுதியில் ''மினி ஆரம்ப சுகாதார நிலையம்'' ஆரம்பிக்கத் திட்டம் உருவாக்கப் பட்டு அதற்கான பங்குத்தொகை செலுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆமெனில் இதுநாள்வரை அதன் பொருட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக ஆரம்பச் சுகாதார நிலைய இயக்குநர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தக்க நடவடிக்கை எடுப்பதற்காகத் தொடர்பு கொண்டுள்ளார்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS